உ

॥ ஶ்ரீ: ॥



திருச்சிராப்பள்ளி தாலூகா

பழுவூர் மகா-ள-ள-ஸ்ரீ

# (Late) P. ராமச்சந்திரய்யரவர்களின்

# வேதாந்த பாடசாலை வகையரா

# தர்மங்களின் 11-வது வருஷத்திய ரிபோர்டு.

**1942—'43**

**சித்திரபானு வருஷம்**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின்

உபன்யாஸச் சுருக்கத்துடன் கூடியது.



தர்மஸ்தாபகர் ஸ்ரீ P. ராமசந்திரய்யர்.

|| श्रीः ||

# திருச்சினப்பள்ளி ஜில்லா பழூர் மகா-ர-ர-ஸ்ரீ P. ராமச்சந்திரய்யரால் ஏற்படுத்தப்பட்ட வேதாந்த பாடசாலை வகையரு தர்மங்களின் 1—4—42 முதல் 31—3—43 முடிய ஒரு வருஷத்திய ரிபோர்ட்டு

---

## சித்ரபானு வருஷம்

ஸ்ரீ பரமாசார்யாளின் அனுக்கிரஹத்தின்பேரில் நடத்தப்பட்டுவரும் பழூர் வேத, வேதாந்த பாடசாலையின் 11வது வருஷத்திய சுருக்கமான வரலாறு

---

### 1. வேதாந்த பாடசாலை

(a) வருஷாரம்பத்தில் மூன்று வித்யார்த்திகள் இருந்தார்கள். அவர்கள் இந்தப் பாடசாலையின் பாடங்களைப் பூர்த்தி செய்துகொண்டு, ஸன்மானம் பெற்று ஆனிமீ 18உ ஊர் சென்றார்கள். பிறகு புது வித்யார்த்திகள் 4 பேர்கள் சேர்க்கப்பட்டு ஆடி 2ந் தேதியிலிருந்து பாடம் உபக்ரமிக்கப்பட்டது. ஷை 4 வித்யார்த்திகளும் திருச்சி அத்வைத சபையில் நீலகண்ட பிரகாசிகை மட்டும் பரீக்ஷை கொடுத்துத் தேறினார்கள். இந்தப் பாடசாலையின் ரூல்படி வித்யார்த்திகளுக்கு ஐப்பசி மாதத்திலும் பங்குனி மாதத்திலும் பரீக்ஷைகள் நடத்தப்பட்டன. பங்குனி-மீ பரீக்ஷையில் ஒருவர் ரஜாவில் இருந்தபடியால் மூவருக்கு ஜம்புகேச்வரம் ஜகத்குரு வித்யாஸ்தானம் பிரின்ஸ்பால ஸ்ரீ ராம சாஸ்திரிகள் அவர்கள் பரீக்ஷை செய்ததில் இருவர்கள் தேறினார்கள். மற்றொருவர் பரீக்ஷையில் தேறவில்லை. ஷை பரீக்ஷை செய்த சாஸ்திரிகளுக்கு நன்றி பாராட்டி வந்தனம் அளிக்கப்படுகிறது. வருஷக் கடைசியில் 4 வித்யார்த்திகளும் ஒரு அத்யாபகரும் இருந்து வருகிறார்கள்.

## (b) சித்ரபானு வருஷத்தில் நடந்த பாடங்களின் விபரம்.

காலை 8-மணி முதல்
10-மணி வரையில்

प्राचीनविद्यार्थिनां—भाष्यविभागे, बृहदारण्यके तृतीयाध्यायप्रभृतिसमग्रं. नवीनानां—वेदान्तपरिभाषा, सिद्धान्तलेशसंग्रहः, दीपिकासर्वस्वे— अनुमानपरिच्छेदावधिः ।

மாலை 3-மணி முதல்
5-மணி வரையில்

प्राचीनानां— सिद्धान्तलेशसंग्रहे तृतीयचतुर्थपरिच्छेदौ न्यायरक्षामणौ, आदितः अत एव प्राणः इत्यधिकरणपर्यन्तम् । नवीनानां—न्यायबोधिनी, तर्कसंग्रहसर्वस्वम्, दीपिका, प्रकाशिका ।

## 2. வேத பாடசாலை

(a) வருஷாரம்பத்தில் 9 பையன்கள் இருந்தார்கள். ஒரு பையனுக்கு க்ரமாந்தம் முடிந்து ஊருக்குச்சென்றான், பிறகு நங்கவரம் கிராமத்திய சங்கரன் என்ற பையன் சேர்க்கப்பட்டான். ௸ பையன்களுக்கு வழக்கம் போல் வைகாசி மாதத்திலும் கார்த்திகை மாதத்திலும் பரீக்ஷைகள் நடத்தப்பட்டன. மூன்று பையன்கள் நீங்கலாக மற்றவர்கள் எல்லோரும் பரீக்ஷைகளில் தேறினார்கள். பைய்ன்களின் போஜனாதி வசதிகள் சரிவர பராமரிக்கப்பட்டு வருகிறது. அல்லூர் பிரம்மஸ்ரீ தாண்டவேசுவர கனபாடிகள் பிரதிப்ரயோஜன மன்னியில் பரீக்ஷை செய்த உபகாரத்தை நன்றிபாராட்டி ௸ யார்களுக்கு வந்தனம் அளிக்கப்படுகிறது. ௸ வேதபாடசாலை பையன்களுக்கு காவ்யபாடமும் சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகிறது.

## (b) சித்திரபானு வருஷத்தில் நடந்த அத்யயனங்களின் விபரம் :—

ब्राह्मणभागे—द्वितीयाष्टकं समग्रम्, तृतीयाष्टके आदितष्षट् प्रश्नाः, काठक आरण्यकं च समग्रम् ॥

पदविभागे—पञ्चमषष्ठकाण्डौ, सप्तमकाण्डे अन्तिमप्रश्नद्वयम् ॥

क्रमविभागे—षष्ठसप्तमकाण्डौ ॥

जटाविभागे—चतुर्थकाण्डः ॥

घनविभागे—तृतीयकाण्डे प्रथमप्रश्नः ॥

काव्यविभागे—संस्कृतप्रवेशिनी, समासचक्रम्, कुमारसंभवे प्रथमसप्तमसर्गौ ॥

## 3. சிறுகமணி வைத்தியசாலையும் இதர தர்மங்களும்.

(a) சிறுகமணி ஸ்ரீ பர்வதம்மாள் ஆயுர்வேத தர்ம வைத்ய சாலையில் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 6 மணி வரையிலும் நோயாளிகளின் தேகத்தைப் பரிசோதித்து, தக்க மருந்துகள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. தினசரி சராசரி 50 பேர்களுக்குக் குறையாமல் வந்து சிகித்ஸை பெற்று செல்லுகிறார்கள். இந்த வட்டாரங்களிலுள்ள ஏழை ஜனங்களுக்கு இந்த வைத்தியசாலையினால் ஏற்படும் உதவி கொண்டாடத்தக்கது. தவிர, இந்த வருஷம் இந்த வட்டாரங்களில் காலரா நோய் பெரு வாரியாய் வந்து அனேகம் பேர்களை உபாதிக்கு உள்ளாக்கியும், இவ்வைத்யசாலையினாலும் வைத்யரின் உபகார சிந்தையினாலும், அனேகம் பேர்கள் குணமடைந்தார்கள். அச்சமயங்களில் ஜில்லா போர்டார் செய்த உதவி போற்றத்தக்கது. தவிர இவ்வருஷம் இரண வைத்தியத்துக்குத் தேவையான ஆயுதங்கள் வாங்கப்பட்டிருப்பதால் இரண சிகித்ஸை குறிப்பிடத்தக்கபடி நடந்து வருகிறது.

(b) ஸ்ரீ பர்வதம்மாளால் ஷை கிராம சிவன் கோவிலில் அன்னாபிஷேகத்திற்கு, வழக்கம்போல் பக்கா 18 படி அரிசியும் ரூபாய் ஏழும் உதவி செய்யப்பட்டது.

(c) ஷை கிராம பஜனை மடத்தில் வழக்கம்போல் தக்க பாகவத கோஷ்டிகளைக்கொண்டு ஸ்ரீராமநவமி உத்ஸவம் கிரமப்படி நடத்தப்பட்டது.

ஷை தர்மங்களின் ஸ்தாபகரான, ரிடையர்டு டிப்டி கலெக்டர் (Late) P. ராமச்சந்திர ஐயர் அவர்களின் ஞாபகார்த்தமாக 2-வது வருஷக்கொண்டாட்டம் சித்ரபானு-ஸு கார்த்திகை-மீ 18-உ (3-12-42) குருவாரத்தன்று ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்களின் தலைமையில் பழுவூர் பாடசாலைக் கட்டிடத்தில் நடத்தப்பட்டது. அன்று ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களை காலை 8-மணிக்கு சிவலாயத்திலிருந்து பெரிய பல்லக்கில் வாத்ய கோஷத்துடனும் உபநிஷத் பாராயணங்களுடனும் வீதியில் ஊர்வலமாக பரம உத்

ஸாகத்துடன் அழைத்து வந்து, பாடசாலை கட்டிடத்தில் சேர்ப்பித்தவுடன் ஸ்ரீ பரமாசார்யாள் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பூஜையை நடத்தினர்கள். அவ்வமயம் ஷை தர்ம ஸ்தாபகரான ராமச்சந்திரய்யரின் பார்யாள் ஸ்ரீபர்வதம்மாளால் பாத பூஜை நடத்தப்பட்டது. பூஜா, ப்ராஹ்மண ஸந்தர்ப்பணாதிகள் முடிந்தவுடன் ஸ்ரீபரமாசார்யாள் ஸபா மண்டபத்துக்கு விஜயம் செய்தார்கள். அவ்வமயம் பல பண்டிதர்களும், பல பிரபுக்களும் பல உத்யோகஸ்தர்களும் சபையில் வீற்றிருந்தார்கள். அவர்களில் சிலரை தெரிந்தமட்டில் இங்கு குறிப்பிட்டிருக்கிறோம்.

பிரம்மஸ்ரீ போலகம் ஸுந்தரேச சாஸ்திரிகள்.
,, ,, ஸ்ரீராம சாஸ்திரிகள்.
பிரம்மஸ்ரீ அல்லூர் தாண்டவேசுவர கனபாடிகள்.
,, ,, நாராயண சாஸ்திரிகள்.
கல்லிடைக்குரிச்சி வெங்கிட்டராம சாஸ்திரிகள்.
R. ஸ்ரீநிவாஸய்யர், வக்கீல்.
V. ஜயராமய்யர், வக்கீல்.
அனந்தராமய்யர், கல்லிடைக்குரிச்சி.
மணக்கால் கந்தஸாமி அய்யர்.
ராவ் பஹதூர் ரங்கசாமி அய்யர், பழூர்.
A. வெங்கிட்டராம அய்யர், வக்கீல்.
முத்தரசநல்லூர் வெங்கிட்டராம அய்யர்.
நங்கவரம் லக்ஷ்மீநாராயண அய்யர்.
அல்லூர் R. ராமய்யர்.
பேரூர் ராமஸ்வாமி தீக்ஷிதர்.
,, விசுவநாத சாஸ்திரிகள்.
,, கணபதி சாஸ்திரிகள்.
,, அனந்தராமய்யர்.
காரைக்குடி ஜலதரங்க வித்வான் கணேசய்யர் & Brother.
சிறுகமணி R. விசுவநாதய்யர்.
,, S. S. ராஜகோபாலய்யர்.
,, S. R. வெங்கடேசய்யர்.
,, L. K. ராமச்சந்திரன் L. I. M.
,, ஜயராமன்.
,, சுப்பிரமணியன்.

நங்கவரம் பெரியசாமி தீக்ஷிதர்.
,, ஸூரியநாராயண வாத்யார்
,, ராமநாத வாத்யார்.
,, வெங்கிட்டராமய்யர்.
,, சங்கரய்யர்.
சிருகமணி S. A. வைத்யநாதய்யர்.
பேட்டைவாய்த்தலை குப்பு ராவ்.
அம்மங்குடி நடராஜ சாஸ்திரிகள்.
தென்னூர் ராமசேஷய்யர்.
,, சுந்தரமய்யர், Retd. Income-Tax Officer.
,, K. R. சுந்தரமய்யர்.
திருச்சி V. ராமஸ்வாமி அய்யர்.

இன்னும் பல பிரமுகர்களும், சுற்றுபக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து அநேகர்களும் வந்திருந்தார்கள்.

முதலில் யக்ஞேச்வரன் என்ற பையனால் மங்களச்லோகம் படிக்கப்பட்டதும் பாடசாலை பண்டிதர் ஸ்ரீ S. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் ஸ்வாகதப் பத்திரிகை வாசிக்கப் பட்டது. பிறகு ஷ ஸபைக்கு ஸ்ரீ பரமாசார்யாள் தலைமை வகித்து உபன்யாஸம் செய்ததை இத்துடன் பின்னால் அச்சிடப் பட்டிருக்கிறது. பிறகு போலகம் ப்ரம்ஹஸ்ரீ ஸௌந்தர சாஸ்திரிகள் தர்மத்தைப் புகழ்ந்து உபன்யாஸம் செய்தார்கள். பாடசாலை வித்யார்த்திகளை பரீக்ஷை செய்த பிறகு காரைக்குடி கணேசய்யரால் चिन्तानास्तिकिल என்ற ஸதாசிவப்ருஹ்மத்தின் கீர்த்தனை ஜலதரங்க வாத்யத்தில் பாடியவுடன் ஸாயரக்ஷை ஸபை கலைந்தது. ராத்ரி 7 மணிக்கு மறுபடி ஸபை ஆரம்பமாயிற்று. ஸ்ரீ பரமாசார்யாள் தக்ஷிணாமூர்த்தி அவஸ்ரமாக भद्रासनத்தில் அமர்ந்து யுக்திவாதத்தில் குசலர்களான பல அறிஞர்கள் முன்னிலையில் ப்ரச்ன, ப்ரதிவசன ரூபமாக [illegible]ஹமான பல தத்வங்களை உபதேசித்தார்கள். அதன் சுருக்கம் கூடுமான வரை இத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது. ஜகத்குரு வித்யாஸ்தானம் பிரின்ஸிபால் ஸ்ரீராம சாஸ்திரிகள் உபன்யஸித்தபிறகு இரவு 11-மணிக்கு பாடசாலை பண்டிதரால் धन्य வாதம் சொல்லப்பட்டு ஸபை கலைந்தது.

தவிர, ஸ்ரீ பரமாசார்யாள் ஷை பாடசாலையிலேயே சுமார் ஒரு மாதகாலம் விஜயம் செய்திருந்து, ஸ்வாமி பூஜா ஸந்தர்ப்ப ணாதிகளை நடத்திக்கொண்டு, பாடசாலைகளை நடத்திவரவேண்டிய மாதிரிகளை போதித்துக்கொண்டும் இருந்ததுடன், தை-மீ 7-உ மாலையில் வித்யார்த்திகள் யாவரையும் பரீக்ஷை செய்து பண்டி தருக்கு ஸால்வையும் மற்றவர்களுக்கு வஸ்திரங்களும் பிரஸாத புரஸ்ஸரம் அனுக்கிரஹித்தார்கள். இதே மாதிரி மேன்மேலும் இந்த தர்மங்களின் அபிவிருத்தியின் பொருட்டு விசேஷானுக் கிரஹம் செய்துகொண்டு இருக்கவேண்டும் என்பதாக ஸ்ரீ பரமா சார்யாளை அனேககோடி சாஷ்டாங்கப் ப்ராணிபாதங்களுடன் பிரார்த்திக்கிறோம்.

ஷை தர்மங்களின் 1942-43 சித்ரபானு வருஷத்திய ஆதாய செலவு கணக்குகளும் மூல சொத்துக்களின் கணக்குகளும் ஸ்ரீ M. S. கிருஷ்ணஸாமி & ஜகன்னாதன் அவர்களால் பரிசீலனை செய்து ஆடிட் செய்யப்பட்டது. ஷையார்களால் கையெழுத்து செய்யப்பட்ட கோஷ்பாரா இத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது. ஷையார்கள் ப்ரதிப்ரயோஜனமன்னியில் ஆடிட் செய்ததற்கு நன்றிபாராட்டி வந்தனம் அளிக்கப்படுகிறது.

பழூர்,
முத்தரசநல்லூர் Post,
ஸுபானு ஆவணி 29-உ
14—9—43.

S. அண்ணாத்துரை அய்யர்,
A. V. சுப்பிரமணிய அய்யர்,
P. V. இராமனாதய்யர்,
டிரஸ்டிகள், வேதாந்த பாடசாலை etc.

# 31—3—1943 தேதியிலிருந்தபடியான கையிருப்புச் சீட்டு

| ருணங்கள். | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. | ஆஸ்திகள். | ரூ | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வேதாந்தபாடசாலை | | | | | | | நிலங்கள் | | | | | | |
| பண்டு. | | | | | | | சென்ற கையிருப்புச் சீட்டுப்படி ... | | | | 12,412 | 0 | 0 |
| | | | | | | | வீடுகள் மனைக்கட்டுகள் | | | | | | |
| சென்ற கையிருப்பு | | | | | | | சென்ற கையிருப்புச் சீட்டுப்படி .. | | | | 4,500 | 0 | 0 |
| சீட்டுப்படி. | 54,690 | 2 | 6 | | | | ஆபீஸ் சாமான்கள் | | | | | | |
| | | | | | | | சென்ற கையிருப்புச் சீட்டுப்படி .. | 55 | 0 | 0 | | | |
| இவ்வருஷத்திய | | | | | | | தேய்மானம் செலவு எழுதியது ... | 10 | 0 | 0 | | | |
| ஆதாயம். | 2,100 | 8 | 4 | | | | | | | | 45 | 0 | 0 |
| | | | | 56,790 | 10 | 10 | புஸ்தகசாலை | | | | | | |
| கடன்கள். | | | | | | | சென்ற கையிருப்புச் சீட்டுப்படி ... | 324 | 0 | 0 | | | |
| | | | | | | | இவ்வருஷம் வாங்கியது ... | 110 | 0 | 0 | | | |
| ஸ்ரீ பர்வதம்மாள். | | | | 700 | 0 | 0 | | | | | | | |
| | | | | | | | | 434 | 0 | 0 | | | |
| | | | | | | | தேய்மானம் ... | 60 | 0 | 0 | | | |
| | | | | | | | | | | | 374 | 0 | 0 |
| | | | | | | | இன்வெஸ்டுமெண்டுகள் லிஸ்டுப்படி | | | | 36,565 | 1 | 6 |
| | | | | | | | கடன்கள் புரோநோட்டில் வரவேண்டியது | | | | 95 | 0 | 0 |
| | | | | | | | கையிருப்பு நெல் ... | | | | 659 | 12 | 0 |
| | | | | | | | கையிருப்பு ரொக்கம் ... | 363 | 1 | 4 | | | |
| | | | | | | | பாங்குகளில் S. B. கணக்கில் ... | 2,476 | 12 | 0 | 2,839 | 13 | 4 |
| | | | | 57,490 | 10 | 10 | | | | | 57,490 | 10 | 10 |

பரிசீலனை செய்ததில் சரியாயிருக்கிறது

Trichinopoly,
1st September, 1943.

M. S. KRISHNASWAMI & JAGANNATHAN,
ரிஜிஸ்டர்டு அக்கவுண்டன்ட்ஸ், கௌரவ ஆடிட்டர்கள்.

# வேதாந்த பாடசாலை, பழூர்.


## 31—3—1943 தேதியோடு முடிவான ஒரு வருஷத்திய ஆதாய செலவு கணக்கு.

| நெ. | செலவு. | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. | நெ. | ஆதாயம். | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேதாந்த பாடசாலை. | | | | | | | | | | | |
| 1 | சம்பளம் & ஸ்டைபெண்டு ... | | | | 987 | 5 | 8 | 1 | நில வருமானம் ... | 1,674 | 5 | 8 |
| 2 | சங்கரஜயந்தி ... | | | | 35 | 0 | 0 | 2 | வட்டி ... | 224 | 15 | 0 |
| | வேதபாடசாலை. | | | | | | | 3 | டிவிடெண்டுகள் ... | 2,721 | 14 | 9 |
| 3 | உபாத்யாயர் வகையறு சம்பளம் | 370 | 12 | 11 | | | | 4 | டிக்ரி' மூலம் வீடு கிரயத்தில் | 1,212 | 0 | 0 |
| 4 | Boarding ரொக்கச்செலவு ... | 427 | 15 | 10 | | | | | லாபம் ... | | | |
| 5 | ஷை நெல் செலவு ... | 223 | 4 | 0 | 1,104 | 1 | 3 | | | | | |
| 6 | தீபாவளி இனம் ... | 82 | 0 | 6 | | | | | | | | |
| | வைத்யசாலை. | | | | | | | | | | | |
| 7 | வைத்யர் வகையறு சம்பளம் .. | 441 | 2 | 0 | | | | | | | | |
| 8 | மருந்துகள் ... | 335 | 14 | 3 | 813 | 9 | 3 | | | | | |
| 9 | ஆயுதங்கள் ... | 36 | 9 | 0 | | | | | | | | |
| 10 | சிவன்கோவில் ... | | | | 71 | 8 | 0 | | | | | |
| 11 | மற்ற தர்மங்கள் ... | | | | 90 | 0 | 0 | | | | | |
| 12 | சில்லரைச் செலவு ... | | | | 342 | 11 | 8 | | | | | |
| 13 | கட்டிட ரிபேர் ... | | | | 15 | 10 | 0 | | | | | |
| 14 | வட்டி ... | | | | 50 | 0 | 0 | | | | | |
| 15 | கிஸ்தி ... | | | | 130 | 13 | 0 | | | | | |
| 16 | கோர்ட்டுச் செலவு ... | | | | 2 | 0 | 0 | | | | | |
| 17 | தேய்மானம் ... | | | | 70 | 0 | 0 | | | | | |
| 18 | ஸ்டேஷனரி, தபால் வகையறு | | | | 20 | 0 | 3 | | | | | |
| 19 | செலவு நீக்கி நிகர் ஆதாயம் ... | | | | 2,100 | 8 | 4 | | | | | |
| | மொத்தம் ... | | | | 5,833 | 3 | 5 | | மொத்தம் ... | 5,833 | 3 | 5 |

பரிசீலனை செய்ததில் சரியாயிருக்கிறது.

Trichinopoly,
1st September 1943.

M. S. KRISHNASWAMY & JAGANNATHAN
ரிஜிஸ்டர்டு அக்கவுண்டன்ட்ஸ், கௌரவ ஆடிட்டர்கள்.



॥ श्रीः ॥

श्रीकाञ्ची कामकोटिपीठाधिपति श्रीजगद्गुरु श्रीशङ्कराचार्याणां

# स्वागत पत्रिका ॥

१. श्रीचन्द्रशेखरगुरो, श्रीकाञ्चीकामकोटिकृतनिलय ।
सर्वगतपुण्यमूर्ते स्वागतमधुना कथं तव ब्रूमः ॥

२. श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरो त्वत्पादपाथोरुह-
स्फीतामोदरसानुभूतिभरिताः सद्यो वयं निर्वृताः ।
साक्षाच्छ्रीगुरुरूपमेत्य भगवान् श्रीदक्षिणास्योऽधुना
ह्यस्मद्भाग्यवशात् विभाति पुरतः किं भाग्यमस्मादृशाम् ॥

३. कारुण्यामृतपूरपूरितहृदः कल्याणपारंपरी
केलीमन्दिरतामुपाश्रितवतः कामान्तकोपासितुः ।
काषायाङ्कितवाससः करलसद्दण्डस्य कान्ताकृतेः.
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका नो गतिः ॥

४. एषा ग्रामटिका क्व नाम पलुवूराख्या क्व चायं जग-
त्पूज्यो देशिकसार्वभौम इति नः शङ्का निवृत्ताधुना ।
वत्सं गौरनुरुध्यते ननु यथा तन्मङ्गलाकांक्षिणी
तद्वच्छिष्यगणं स्वयं ह्यनुसरत्याचार्यवर्योऽधुना ॥

## ஸ்ரீபரமாசார்யாளின் உபந்யாஸம்

திருச்சி ஜில்லா பழுவூருக்கு ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தபொழுது 3—12—42-ல் அவ்வூர் வேத வேதாந்த பாடசாலை ஸ்தாபகர் தினக் கொண்டாட்டத்தன்று மாலை 3 மணிக்கு ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகள் ஷை ஸ்தாபகரான P. ராமச்சந்திரய்யரவர்களுடைய தர்மங்களைப்பற்றி உபன்யஸித்தபொழுது சொல்லப்பட்ட விஷயங்களின் ஸாரமாவது :—

ஸ்ரீ ராமச்சந்திரய்யர் தான் ஸம்பாதித்த திரவியம் பூராவும் ஸத்விஷயத்தில் விநியோகம் அடைவதற்காக வேதம், வேதாந்தம், வைத்யம் இம்மூன்று தர்மங்களும் சாச்வதமாக நடக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். லோகத்தில் எந்த தர்மங்களை அனுஷ்டிப்பதற்கும் முதலில் சரீரம் திருடமாக இருக்கவேண்டும். வியாதி இல்லாமல் இருக்கவேண்டும். இதற்காக வைத்யம். பிறகு வேதத்தில் கூறப்பட்ட தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும். இதற்காக வேதாத்யயனம். வேதத்தை அத்யயனம் செய்வதால் இவனுடைய பாபங்களெல்லாம் நிவர்த்தியாகின்றன. இக்கிராமத்தில் எந்தப்பிருமணர்கள் வேதத்தைக் காதால் கேட்கிறார்களோ அவர்களுக்கும் பாபம் தொலையும். கடைசியாக அக்ஞானத்தைப் போக்கடிக்க வேதாந்தம். அதனால்தான் இம்மூன்றில் வேதாந்தத்தை* பிரதானமாக வைத்திருக்கிறார். இவர் செய்த தர்மங்களைக் கொண்டாடுவதற்காக நீங்கள் கூடி இருக்கிறீர்கள். இது கேவலம் லௌகிகமான கொண்டாட்டமில்லை. இங்கு கூடி இருக்கும் உங்களுக்கும் மஹத்தான புண்யமுண்டு.

> धर्मः श्रुतो वा दृष्टो वा स्मृतो वा कथितोऽपि वा ।
> अनुमोदितो वा राजेन्द्र पुनाति भुवनत्रयम् ॥

என்று ஸ்ம்ருதி. தர்மத்தைக் காதால் கேட்டாலும் பார்த்தாலும் நினைத்தாலும் கொண்டாடிப் பேசினாலும் அனுமோத

---

*வில் காபியில் எவ்வளவு பணத்திற்கு சிரமம் ஏற்பட்டாலும் வேதாந்த பாடசாலையைக் காப்பாற்றியாகவேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது.

னம் செய்தாலும் புண்யம் உண்டு. தர்மத்தைச் செய்தவர்களுடைய புண்யத்தை பூர்ணமாக நம்மால் சொல்ல முடியாத போனாலும் முடிந்தவரை சொல்லியே தீரவேண்டும். ஒருவர் தர்மத்தை ஸ்தாபித்தாலும் அது சாச்வதமாக நடைபெறுவதற்கு எல்லோரும் ஈடுபடவேண்டும். ஆனால் தற்காலம் நாகரீக முறையில் நடக்கும் தர்மங்களில் சில விஷயங்கள் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. சாதாரணமாக இப்பொழுது ஆஸ்பத்திரிகளையும், பள்ளிக்கூடங்களையும் பாங்குகளையும் அதிகமாக ஏற்படுத்துகிறார்கள். ஆனால் அதை ஏற்படுத்துகிறவர்களுடைய லக்ஷ்யம் நிறை வேறுவதில்லை. ஜனங்கள் வியாதி இல்லாமல் இருப்பதற்காக ஆஸ்பத்திரிகள். ஆனாலும் உலகத்தில் முற்காலத்தைக்காட்டிலும், வியாதிகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. அக்ஞானத்தைப் போக்கடிக்க கல்வி. இப்பொழுது பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கப்படும் படிப்பால் அக்ஞானம் போவதில்லை. காலேஜ், ஹைஸ்கூல் முதலிய கல்வி ஸ்தாபனங்களும் நன்றாகப்படித்த சட்டப் படிப்புகளும் எங்கு அதிகமோ அங்குதான் வ்யவஹாரங்களும், தவறுதல்களும் அதிகமாக நடக்கின்றன. படிக்காத சாமான்யர்களிடம் பொய் பிரட்டுகள் மிகக்குறைவு. பாபத்திற்குச் சற்றேனும் பயந்து நடப்பார்கள். இதை எல்லாம் பார்த்தால் காலேஜுகளும், ஹைஸ்கூல்களும் இல்லாமல் இருந்தால் லோகத்திற்கு க்ஷேமம் ஏற்படுமோ என்று கூடத் தோன்றுகிறது. இருந்தாலும் நவீன கல்விமான்கள் ஏராளமாகப் பணம் சம்பாதிப்பதைப் பார்க்கிறோம். லௌகிகப்படிப்பு தாரித்ரிய நிவ்ருத்திக்கு உபயோகப்படுகிறது. சாஸ்திரம் வாசிக்கிற வித்யார்த்திகளுக்கோ அவ்விதம் ஏராளமான பொருள் சம்பாத்யம் ஏற்படுவதில்லை. அவர்கள் ஆயுள் பர்யந்தம் தமது வாழ்நாளை தரித்ரநிலைமையிலேயே கழிக்க வேண்டியிருக்கிறது. படிக்கும் காலத்தில் மாத்திரம் அவர்களுக்கு அன்னவஸ்திரங்கள் கொடுக்கப்படுகின்றன. படிப்பு முடிந்துவிட்டால் அதுவும் நின்று போய் விடுகிறது. இவ்விதப் படிப்பைக்கொடுத்து ஏன் சிறுவர்களை வீணாக்குகிறீர்கள் என்றும், அனேகர் மேலெழுந்தவாரியாய்க் கேட்கின்றனர். ஆனால் பெரிய சம்பளம் வாங்கிய உத்யோகஸ்தர்களும் உபகாரச்சம்பளம் பெற்று விச்ராந்தி அடைந்த பின்னர்

"என்ன நாம் உத்யோகம் செய்தாலும் மனதிற்கு சாந்தி வர மாட்டேனென்கிறது. யாராவது ஒரு பண்டிதர் கிடைத்தால் தேவலே. நமது பெரியோர்களுடைய ஞானசாஸ்திர நூல்களைக் கேட்டு அதன் மூலம் பாக்கி நாட்களை சாந்தத்துடன் கழிக்கலாம் என்று நினைக்கின்றேன்" என்று பல பேர்கள் சொல்லக்கேட்கிறோம். இங்கிலீஷ் படிப்பையும் அதனுல் ஏற்படும் பெரிய சம்பளங்களையும் தியாகம் செய்து தாங்கள் தாரித்ரியத்துடனேயே காலக்ஷேபம் செய்யும் சில வேதசாஸ்திர பண்டிதர்களாவது இராவிட்டால் வெறும் பணத்தாலும் கிடைக்கப்படாத மனச்சாந்தியைக் கொடுக்கும் நமது சாஸ்திரங்களின் விலையற்ற தத்வங்கள் உலகத்திற்கு இழக்கப்பட்டுப் போயிருக்கும் அல்லவா.

இதற்காகத்தான் இந்த தர்மத்தை ஏற்படுத்தி யிருக்கிறுர். இதைப் பரிபாலிருக்கிறவர்களுக்குத்தான் பொறுப்பு அதிகம். புத்தி நழுவாமலிருக்கவேண்டும்.

दानपालनयोर्मध्ये दानाच्छ्रेयोऽनुपालनम् ।
दानात्स्वर्गमवाप्नोति पालनादच्युतं पदम् ॥

பரிபாலிப்பதில் எவ்வளவு புண்யம் இருக்கிறதோ அதுபோல் கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்தாலும் மகத்தான அனர்த்தம் உண்டு. ஆதலால் அவ்வித தோஷத்திற்கு இடமில்லாமல் இதன் டிரஸ்டிகளும் இக்கிராமத்து ஜனங்களும் இந்த தர்மங்களை சரிவர நடக்கும்படி செய்து சிரேயஸ்ஸை அடையவேண்டும்.

அன்று இரவு 7 மணி முதல் 11 மணி வரை ஊஹாபோஹமான சாஸ்திர ரஹஸ்யங்களை பல திருஷ்டாந்தங்களுடன் ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகள் உபதேசித்து அனுக்ரஹித்தார்கள். அதன் சுருக்கம் :—

மோக்ஷமென்பது மறுபடியும் பிறவாமல் இருப்பது. இதைக் கர்மாவினுலேயே சாதிக்கலாமென்று சிலர் சொல்லுகிறுர்கள். அந்த மதத்தின் விவரமாவது, கர்மா மூன்று விதம். பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமி. முன் நாம் செய்திருக்கும் புண்ய பாபங்களில் இப்பொழுது பலனைக் கொடுத்துக்கொண்டிருப்பது பிராரப்தம், மீதியுள்ளவை சஞ்சிதம். இனி செய்யப்போகும்

கர்மா ஆகாமி. காம்யநிஷித்த கர்மாக்களை விலக்கி நித்ய நைமித்திகங்களைமட்டும் செய்தால் மோக்ஷம் கிடைக்கும். நித்ய நைமித்திக கர்மாக்களால் சஞ்சிதமும் அனுபவத்தால் பிராரப்த மும் நசித்துவிடுகிறது. ஆகாமி கர்மாவைச் செய்வதில்லை, எனவே மறுபடியும் பிறப்புக்கு கர்மா இல்லாததால் பிறப்பற்ற மோக்ஷம் சித்திக்கிறது என்று மீமாம்சகர் முதலியவர்கள் சொல்லுகிறார்கள். இந்த வாதத்தை நம் ஆசார்யாள் பாஷ்யாதிக் கிரந்தங்களில் ஆங்காங்கு அனுவாதம் செய்து கண்டித் திருக்கிறார்கள். அனாதிகாலம முதற்கொண்டு நாம் கர்மாக்களை செய்துகொண்டிருக்கிறோம். ஸஞ்சித கர்மாக்கள் அனந்தம். இவ்வளவையும் இந்த ஒரு ஜன்மாவில் செய்த நித்யகர்மாவால் எப்படி அழிக்கமுடியும். அப்படியே அழித்தாலும் புண்ய கர்மா வால் பாபம் போகுமே தவிர புண்யம் எப்படிப்போகும். அது நற்பிறவியையாவது கொடுக்கத்தானே செய்யும். மேலும் பாபத்திற்குக் காரணமான அக்ஞானமும் காமமும் இருக்கும் பொழுது பாபத்தை எப்படி விலக்கமுடியும். கரையான் புற்றின் மேல்பாகத்தை தள்ளிவிட்டால் போதாது. மறுநாள் அது போல் புற்று வைத்துவிடும். தாய்ப் புழுவை யழிக்கவேண்டும். இதுபோல் அக்ஞானம். இது ஞானத்தாலன்றி வேறொன்றா லும் போகாது. ஞானத்தை அடைய சாஸ்திரங்களை அப் யஸிக்கவேண்டும். ஶ்ரவணமனனாதிகள் செய்யவேண்டும்.

தேஹத்தைவிட ஆத்மா வேறு என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் நான் கறுப்பு, நான் பெருமன் என்று பேசுகிறோம். அநாவசியமான காரியங்களிலெல்லாம் மனதைச் செலுத்துகிறோம். நாமும் ஒரு விதத்தில் பைத்யம் தான். பைத்யக்காரன் தன் மனதில் தோன்றுவதையெல்லாம் வெளியிடுகிறான். நாம் வெளியிடுவதில்லை. இதுதான் வித் யாஸம். மனதைக் கட்டுப்படுத்தவேண்டும். அதிலுள்ள பாப மாகிற அழுக்கு நீங்க கர்மானுஷ்டானம் செய்யவேண்டும். கண்ணாடியில் முகம் தெரிய அழுக்கைத் துடைத்தால் மட்டும் போதாது. கண்ணாடி ஆடாமலுமிருக்கவேண்டும். இதற்காகத் தான் பக்தி உபாஸனம். பக்தியாலேயே மோக்ஷத்தை அடைய லாம் என்று ஶ்ரீராமானுஜாசாரியாள் சொல்லுகிறார். மத ஸ்தாபர்களான எல்லா ஆசார்யாளுக்கும் முடிவில் ஜீவர்

களுக்கு பரம ஸ்ரேயஸ்ஸு ஏற்படவேண்டும் என்பதில் ஒரே அபிப்பிராயந்தான். அதற்கு மார்க்கமான ஒன்றை உறுதிப்படுத்த ஆரம்பிக்கும்போழுதுதான் கக்ஷிப்ரதிகக்ஷிகள் உண்டாகின்றன. எவ்விதமான ஸ்ரேயிஸ்ஸையுமடைய வொட்டாமல் இடைஞ்சல் செய்துவருவது ராகத்வேஷங்கள். ஒரு வஸ்துவை அடைய விரும்பி முயற்சிசெய்தும் கிடைக்காமல்போனால் த்வேஷம்உண்டாகிறது. இது விலக அத்வைத பாவனை செய்ய வேண்டும். நம்மைத்தவிர வேறு வஸ்துகிடையாது. ஒன்றேஅநேகமாகத்தோன்றுகிறது. அந்த ஒன்றும் ஆனந்த ரூபம். ஒரே சர்க்கரையால் செய்யப்பட்ட பல தினுஸான மிட்டாய்களும் தித்திக்குமேதவிர கசக்காது. கசந்தால் அது நாக்கின்தோஷம். ஆனந்த ரூபமான பிரும்ஹத்திலிருந்து உண்டான ஜகத்தும் ஆனந்த மயம்தான். வஸ்து ஒன்றாயிருந்து அநேகமாகத் தோன்றுவதென்றால் அது பொய்யென்று சொல்ல வேண்டும். இதற்கு திருஷ்டாந்தம் ஸ்வப்னம் ரஜ்ஜுஸர்பம் (கயிற்றால் தோன்றும் பாம்பு) முதலியன. இந்த ஸ்வப்னாதிகளை ஸத்யம் என்று ஸ்ரீராமநுஜர் சொல்லுகிறார். மத்வர் ஸ்வப்னத்தை ஸத்யமென்றும் ரஜ்ஜுஸர்பத்தை துச்சம் (அஸத்)* என்றும் சொல்லுகிறார். இந்த திருஷ்டாந்தத்தை ஒத்துக்கொள்ளாமல் போனால் அத்வைத மதம் ஸித்திக்காது என்று அவர்களுடைய கருத்து. நாம் சொல்லும் மித்யையை த்வைதிகள் மலடிமகன் என்பதைப் போல் துச்சத்திலும் விசிஷ்டாத்வைதிகள் ஸத்யத்திலும் சேர்த்து ஸத், அஸத் என்பதாக இரண்டே வஸ்துவைத்தான் ஒப்புக்கொள்ளுகிறார்கள். நாம் மூன்றாவதாக மித்யை என்று ஒன்றைச் சொல்லுகிறோம். नास्ति (இல்லை) என்று ஒருக்காலும் தோன்றாதது ஸத்யம். எக்காலத்திலும் எல்லா இடத்திலும் உண்மைப் பொருளாக இருப்பதே ஸத்யம். அது பரமாத்மா ஒருவர்தான். अस्ति (இருக்கு) என்று ஒருக்காலும் தோன்றாதது அஸத். இதுதான் துச்சம் மலடிமகன், குதிரைக்கொம்பு முதலியன.

ஒரு காலத்தில் இருக்கு என்று தோன்றி பின்னர் இல்லையெனப்போவதே பொய் மித்யை. குதிரைக்கொம்பு ஓர் காலத்

---

*மலடிமகன் என்பதைப்போல் ஒருக்காலும் தோன்றக்கூடாத சூன்யம்.

தில் ஒரு இடத்தில் இருக்கிறது என்று தோன்றுததால் அது பொய்யில் சேராது. , கீழே சொன்ன துச்சத்திலேயே சேரும்.

இதைத்தான் ஸதஸத் விலக்ஷணமென்றும் अनिर्वचनीय என்றும் சொல்லுகிறோம். ரஜ்ஜு ஸர்ப்பம்போல் பிரபஞ்சமும் ஞானத்தால் பாதிக்கப்பட்டுப்போவதால் மித்யை. விசிஷ்டாத்வைதிகளுக்கு बाधम् என்பதே கிடையாது. நாசம் என்பதுதான் அவர்கள் மதத்தில் பிரபஞ்சத்திற்கு. बाधம் வேறு நாசம்வேறு. முன் இருந்து இப்பொழுது இல்லை என்று தோன்றுவது நாசம். முந்தியும் இப்பொழுதும் இனிமேலும் இல்லை என்று தோன்றுவது बाधம். கயிற்றைப் பாம்பாக பிரமித்து பின் வெளிச்சத்தில் கயிராக தோன்றுவது பாதம். கயிறைப் பாம்பாக நினைத்து தடியால் அடித்துவிடுகிறுன். இப்பொழுது பாம்பு போய்விட்டது என்று நினைத்துக்கொள்கிறுன். பின் கயிறு என்று தோன்றுவதே இல்லை. இதுதான் நாசம். இது போல் நித்யம் வேறு சத்யம் வேறு. பிரபஞ்சத்தை ஸத்யமென்றும் அனித்யம் என்றும் சொல்லுகிறுர்கள். **सत्यं ज्ञानमनन्तं ब्रह्म** என்ற ஶ்ருதியில் ஸத்யத்தைக் காட்டிலும் வேருக அனந்தபதம் நித்யத்தைக் குறிக்கிறது. பிரபஞ்சம் அனித்யமாய் இருக்கலாம் ஸத்யமாயும் இருக்கலாம் என்று ராமானுஜர் முதலியவர்கள் சொல்லுகிறுர்கள். அனித்யம் என்று ஒத்துக்கொண்டு ஸத்யம் என்று சொல்லிவிட்டால் அனேகமாய் பொய் என்பதற்கும் ஸத்யம் என்பதற்கும் பிரபஞ்ச சம்பந்தப்பட்ட வரையில் பெயர் மாத்திரத்தில் வித்யாஸம் ஏற்படுகிறது. இவ்விதமாக மதங்களின் விவாதம் ஏற்படுவது ஒரே தாத்பர்யத்திற்கு வெவ்வேறு பெயர் கொடுத்து விவாதம் செய்வதாக ஆகிறது. விசிஷ்டாத்வைதிகள் பிரஹ்மம், பிரபஞ்சம், ஸ்வப்னம் இம்மூன்றையும் ஸத்யம் என்று சொல்லுகிறுர்கன். மூன்றுக்குமுள்ள வைலக்ஷிண்யத்தை மறைக்க முடியாது. ஸ்வப்னம் ஸத்யமென்று சொல்லுகிற ராமானுஜர் **वैधर्म्याच्च न स्वप्नादिवत्** என்ற விக்ஞான வாதியைக் கண்டிக்கும் ஸூத்திரத்தின் பாஷ்யத்தில் ஸ்வப்பனத்திற்கும் ஜாக்கிரத் பிரபஞ்சத்திற்கும் वैधर्म्य (வைலக்ஷிண்ய)த்தை ஸ்தாபிப்பதற்காக அப்யுபகம வாதமாகவாவது ஸ்வப்னம் பொய் என்பதைச் சொல்லி யிருக்கிறுர். பலவித யுக்தியனுபவங்களைக் கொண்டு பார்த்தால் ஸ்வப்னம் போல் பிரபஞ்சம் மித்யை என்

றும் அத்வைதந்தான் ஸத்யமென்றும் தெரிகிறது. நாம் அன்புடன் பக்தி செய்கிறோம். ஆரம்பத்தில் அவர் பெரியவர். நாம் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். அன்பு முற்றிய பின் அது வேறு நாம் வேறு என்பது போய்விடும். ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வஸ்துவிடம் பிரேமை கொள்ளுகிறான். ஆனால் அந்த வஸ்து அழியும் பொழுது இவனுக்கு மகத்தான துக்கத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லுகிறது. ஆனதால் அழியாத பரம்பொருளிடம் நாம் அன்பு வைக்கவேண்டும். இந்திரியங்களை அடக்கவேண்டும். இந்திரியங்களுக்கு பிரமாணங்கள் என்று பெயர். கண்ணால் பார்க்கிறோம், காதால் கேட்கிறோம். இந்திரியங்களால்தான் ஞானம் ஏற்படுவதாக நினைக்கிறோம். நன்றாக யோஜித்துப் பார்த்தோமானால் இந்திரியங்கள்தான் உண்மையை மாறுதலாகக் காட்டுகின்றன. நமக்கு ஞானத்தை வரவொட்டாதபடி தடுக்கின்றன. ஆகாசத்தில் இருக்கும் வெய்யில் கூரையிலிருக்கும் சிறு துவாரம் வழியாக உள்ளே விழுகிறது. துவாரம் வட்டமாயிருந்தால் வட்டமாயும், நீளமாயிருந்தால் நீளமாயும், சதுரமாயிருந்தால் சதுரமாயும் தெரிகிறது. அது அசைந்தால் இதுவும் அசைகிறது. இதுபோல் அகண்டமான க்ஞானம் கண், காது முதலிய ஓட்டைகளின் வழியாக ஏகதேசம் கிடைக்கிறது. அதையும் விஷயத்துடன் சேர்த்துப் பார்க்கும்பொழுது பூர்ணமான ஆத்ம வஸ்து மறைந்துவிடுகிறது.

दन्तिनि दारुबिकारे दारु तिरोभवति सोऽपि तत्रैव ।
जगति तथा परमात्मा परमात्मन्यपि जगत्तिरोधत्ते ॥

மரத்தால் யானை செய்து வைத்திருக்கிறான். தச்சன் என்ன மரமென்று தட்டிப் பார்க்கும்போது யானை மறைந்துவிடுகிறது. குழந்தைகள் நன்கு யானையென்றே கவனிக்கும்போது மரம் மறைந்து நிற்கிறது. இதுபோல்தான் ஜகத்தும் ஈசுவரனும்.

வியாகரண சாஸ்திரத்திற்கு பாஷ்யம் எழுதிய பதஞ்ஜலி ஸ்போடவாதமென்ற தத்துவத்தைச் சொல்லியிருக்கிறார். தார்க்கிகர்கள் சப்தத்தை அனித்யமென்று சொல்லுகிறார்கள். மீமாம்சகர்கள் நித்யமென்று சொல்லுகிறார்கள். வையாகர

ணர்கள் எழுத்துக்களைத் தவிர எழுத்துக்களின் த்வனியிலிருந்து அபிவ்யக்தியடைந்து பிரகாசிக்கும் ஸ்போடமென்று ஒரு பொருளை நித்யமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். அந்த ஸ்போடத்தில் அநேக பேதங்களையும் சொல்லுகிறார்கள். அது எங்கும் நிறைந்ததென்றும் சொல்லுகிறார்கள்.

நித்யமாயும் எங்கும் நிறைந்ததாயுமுள்ள வஸ்துவில் பேதம் ஏது என்று வேதாந்த சாஸ்திரம் அந்த ஸ்போடவாதத்தைக் கண்டிக்கிறது. ககரம் சகரம் முதலிய எழுத்துக்கள் வெவ்வேறாக வும் அநேகமாகவும் அனித்யமாகவும் தோன்றுகின்றன. நாதப் பிரம்ம ஸித்தாந்தப்படி சப்தம் ஒன்றே. அது ஒன்றாக நிறைந் திருக்கும்பொழுது அதை அறிய காதிற்கு சக்தியில்லை. அதற்கு ஓர் உதாஹரணம். ஆகாயத்தில் ஒருநாள் மேகமில்லாமல் சூரி யன் அகண்டமான வெய்யிலுடன் பிரகாசிக்கிறான். நாம் ஒரு வீட்டில் ஒரு உள்ளில் உட்கார்ந்துகொண்டிருக்கிறோம்: ஜன்னல் கதவு திறந்திருக்கிறது. ஜன்னல் வழியாய் வெளியில் பார்க்கும் பொழுது கண்ணுக்கு எட்டினமட்டில் மரமோ மலையோ ஒரு தடங்கலும் இல்லாமல் இருக்கிறது. சூரியனோ பூமியோ கண் ணுக்குத் தெரியவில்லை. அப்பொழுது கண்ணுக்கு எதிரே அகண்டமான வெய்யில் அடித்துக்கொண்டிருந்தாலும் அது ஒரு தடங்கலின்மேல் படாததால் கண்ணுக்கு வெய்யில் புலப் படுவதில்லை. அகண்டமான வெய்யில் (ஒரு துணியோ ஒரு மாடோ) ஒரு தடங்கலினால் கண்டமாக்கப்பட்டபொழுது கண் அதை அறிய சக்தியுள்ளதாக ஆகிறது. அதுபோலவே அகண்ட மான ஒரு சப்தத்தை வாய், பல், நாக்கு முதலியவைகளின் விசித் திரமான சேர்க்கை வெவ்வேறு விசித்திரமான கண்டமான ககரம் சகரம் முதலிய எழுத்துக்களாக தோற்றுவிக்கிறது. ஒரு கூரை வீட்டில் ஒரு ஓட்டை இருந்தால் வெளியில் இருக்கும் அகண்டமான வெய்யில் அந்த ஓட்டைகளின் வடிவத்தை அனு சரித்து வடிவம் கொள்ளுகிறது.

அதுபோலவே அகண்டமான நாதப்பிரம்மம் வெவ்வேறு அனித்யமான உருவங்களைக் கொள்ளுவதுபோல் தோற்றுகிறது. காது என்னும் ஒரு இந்திரியத்தால் கேட்கப்படும் வெவ்வேறு த்வனிகளெல்லாம் உண்மையில் அகண்டமான ஒரு நாதப் பிரம்

மத்தின் திருபுகளாக உண்மையில் இருக்க, கண் என்னும் இந்திரியத்துக்குக் காணப்படும் அனேக விதமான ரூபங்களும், ஒரே வெட்ட வெளியான ஒளியின் திருபுகளே என்று பெறப்படுகின்றது. இவ்விதம் ஒவ்வொரு இந்திரியத்தாலும் அறியப்படும் பொருள், அகண்டத்தின் ஒரு கண்டமாகும் பொழுது அகண்டங்களில் அனேகம் இல்லாததால் பஞ்சேந்திரியங்களால் அறியப்படும் வஸ்துவும் ஒரே அகண்டம்தான். இவ்வித அகண்ட நாதப்பிர்ம்ஹத்தையே ஸ்ஃபோடம் என்று வ்யாகரண சாஸ்திர ப்ரவர்த்தகர்கள் ஒப்புக்கொண்டால்தான் சப்தரூபமான ஸ்ஃபோடத்திற்கு நித்யத்தன்மை ஏற்படும். எல்லா இந்திரியங்களாலும் அறியப்படும் பொருள் ஒரே பரமாத்ம வஸ்து என்பதைக் குறிப்பதற்காகத்தான் அப்பரம்பொருளை நாதம் என்றும், வெளி என்றும், ஒளி என்றும், ரஸம் என்றும் உபநிஷத் வாக்யங்களும் அனுபவ நூல்களும் கூறுகின்றன. இதை அறிவதற்கு இந்திரியங்களை அடக்கி பிரயத்தனம் செய்யவேண்டும். எந்த காரியத்தை நாம் செய்தாலும் அக்காரியம் இப்பூர்ண வஸ்துவை அறிய சாதகமாய் இருக்கவேண்டும். ஒரு காரியம் இதற்கு சாதகம் அல்லவெனின் அதை விடவேண்டும். அக்காரியமே பாபம். இதற்கு சாதகமான காரியமே புண்யம். புண்ய பாபங்களின் வரையறுதல் இதுவே.

இவ்வித ஆத்ம ஸ்வரூபத்தை கர்ப்பத்திலேயே அறிந்த வாமதேவர் பின்வருமாறு சொல்லுகிறார். இதுவரை அக்ஞானமாகிற இரும்புக்கோட்டைகள் என்னைச் சூழ்ந்துகொண்டு இருந்தது. இப்பொழுதுதான் ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்து இரும்புக்கோட்டைகளினின்று ஒரு பக்ஷியைப்போல் கிளம்பி விட்டேன் என்று —

இவ்விதம் ஆசார்யாள் உபன்யசித்து முடிவில் உபதேசித்ததாவது ;

भावाद्वैतं सदा कुर्यात् क्रियाद्वैतं न कर्हिचित् ।
अद्वैतं त्रिषु लोकेषु नाद्वैतं गुरुणा सह ॥

இதுவரை இவ்வுபன்யாசத்தைக் கேட்ட எல்லோரும் அத்வைத எண்ணத்துடன் வீட்டிற்குப்போய் காரியங்களை அத்

வைதமாகச்செய்து விடக்கூடாது. ஞானத்தில்தான் அத்வைதம், கிரியைகளில் அத்வைதம் கிடையாது. முக்கியமாக குருவோடு நீயும் நானும் ஒன்று என அத்வைதம் பேசக்கூடாது.

देहबुध्या तु दासोऽहं जीवबुध्या त्वदंशकः ।
आत्मबुध्या त्वमेवाहं इति वेदान्तडिण्डिमः ॥

த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் மூன்றையும் இந்த ஒரு ஸ்லோகத்தினல் ஆசார்யாள் நிரூபித்து இருக்கிறார்கள். தேகத்தில் பற்று இருக்கும் வரை அதைக்கொண்டு கைங்கர்யம் செய்யவேண்டும். இதுதான் த்வைத நிலைமை. பரிச்சின்ன ஜீவ புத்தியுள்ளவரை நாம் ஈசுவரரின் ஒரு அம்சம். இது விஸிஷ்டாத்வைதம். வியாபகமான ஆத்மாவின் சாக்ஷாத்காரம் தெளிந்த பொழுது அத்வைதம். அத்வைதம்தான் ஆனந்தம்.

— சுபம். —

திருச்சிறுப்பள்ளி
யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்.